போல் இதனையும் அளிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். ஆண்டிமடம் தொகுதியிலுள்ள செந்துறை பஞ்சாயத்து யூனியனுக்கும் ஆண்டிமடம் பஞ்சாயத்து யூனியனுக்கும் அருகாமையிலேயே வள்ளாறு உள்ளது. எனவே டியூப் வெல் காப்பரேஷன் உதவியுடன் நிரந்தரமாக இங்கே குடிநீர் பிரச்சனை நீங்க உடனடியாக சர்வே செய்து நடவடிக்கை எடுக்குமாறு அரசை கேட்டுக்கொள்கிறேன் குறிப்பாக என்னுடைய பகுதியில் ஓலையூர், கொடுக்கூர், இடையகுறிச்சி போன்ற இடங்களில் வாழும் வேட்டைக்காரர்களுக்கு 'தாட்கோ' நிறுவனம் முலமாக உடனயாக வீட்டு கட்டித்தரவேண்டும் என்று இந்த கறி, தமிழ் என்னும் இலக்கிய பூங்காவில் வேற்று மொழி விலங்கினம் புகாதவாறு பாதுகாத்த சொல்வேறு உழவரின் அரசு இது அண்ணாவின் இரு மொழி கொள்கை தான் தமிழகத்துக்கு தேவையென நெஞ்சு நிமிர்த்தி கூறும் அண்ணாவின் இதயக்கனி புரட்சித் தலைவரை பாராட்டுகிறேன். தாயின் தோள் மீது ஏறிக் கொண்டு காதலிக்காக மரக்கிளையில் கனி பறிப்போர் இருப்பதால் தான் தமிழை மிதித்துக்கொண்டு பிற மொழியை எட்டி பிடிக்கத் தாவுகின்ற கொடுமை உடைய எந்த அரசியல் வாதியையும் இனி தமிழகம் மன்னிக்காது. எவ்வளவோ தடைகற்களை படிக்கற்களாகவும் சோதனைகளை சாதனைகளாகவும், சந்தித்து வரும் புரட்சித்தலைவரின் திட்ட எண்ணங்கள் செழிக்க வேண்டும்.

மாண்மிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 29-1-1983 காலை 9·00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும். ஆணைகளும்

123. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பொருட்களை ஒருவகை செய்தல் (தமிழ்நாடு மதுவில்க்குச் சட்டத்தின்கீழ்/பொருட்களைக் கைப்பற்றுதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 8-7-1982 ஆம் தேதியிடப் பற்ற மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 486 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

1983 ஜனவரி 28]

124. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கைத்தறித் தொழிலாளர்கள் (பணியமர்த்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் பல்வகை விதிமுறைகள்) சட்டவிதிகளை செயலுக்குக் கொண்டுவருவது குறித்து 11–3–1982 ஆம் தேதியிடப்பெற்ற தொழிலாளர்–வேலைவாய்ப்புத் துறையின் 543 ஆம் எண் அரசாணை மற்றும் அதன்கீழ் விதிமுறைகளை உருவாக்குவது குறித்து 7-4–1982 ஆம் தேதியிடப்பெற்ற தொழிலாளர்-வேலைவாய்ப்புத் துறையின் 723 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்புகள் [தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கைத்தறித் தொழிலாளர் (பணியமர்த்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் பல்வகை விதிமுறைகள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 61/1981) 57 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

(ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

13. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் 1-2–1982 முதல் 8–4-1982 முடிய உள்ள நடவடிக்கைகளின் சுருக்கக்குறிப்பு.

14. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் 8-9-1982 முதல் 1–9–1982 முடிய உள்ள நடவடிக்கைகளின் சுருக்கக் குறிப்பு.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS